செ.வெ.எண்-45 நாள்-24.03.2018

## அரியலூர் மாவட்டம், புதுப்பாளைம் கிராமத்தில் தி ராம்கோ சிமெண்ட்ஸ் சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைப்பது தொடர்பாக மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் கருத்துக்கேட்புக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட், சவுத் ஆப் சவுத் சுண்ணாம்புக்கல் சுரங்கம் வளாகத்தில் தி ராம்கோ சிமெண்ட் லிமிடெட் நிறுவனத்தின் சுண்ணாம்புக்கல் சுரங்கம் அமைப்பது தொடர்பாக, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில் பொதுமக்களின் கருத்துக்கேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (24.03.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் நவாப்ஜான் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இக்கருத்துக்கேட்புக் கூட்டத்தில் மாசுக்கட்டுபாடுகள் குறித்தும் மற்றும் பொதுமக்களின் கோரிக்கைகள் குறித்தும் கருத்துக்களை பதிவு செய்தார்கள்.

பின்னர், இக்கிராமத்திற்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியரிடம் பொதுமக்கள் கோரிக்கை மனுக்களை அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில், வருவாய் கோட்டாட்சியர் (உடையார்பாளையம்) ஜோதி, மாசுக்கட்டுப்பாட்டு மற்றும் சுற்றுச்சூழல் பொறியாளர்கள் இளமதி, பிரபாகரன் மற்றும் அலுவலர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**